செ.வெ.எண்:17 நாள்:11.03.2017

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் அரியலூர் கால்நடை மருத்துவமனையில் வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் உலர் தீவன கிடங்குகளை மாண்புமிகு அரசு தலைமை கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள் இன்று (11.03.2017) துவங்கி வைத்தார்.

**இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு அரசு தலைமை கொறடா அவர்கள் தெரிவித்ததாவது :-**

மாண்புமிகு முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் வறட்சி காலங்களில் கால்நடைகளுக்கு தீவனம் வழங்குவதற்காக வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் உலர் தீவன கிடங்குகள் அமைத்து கால்நடைகளுக்கு மானிய விலையில் தீவனம் (வைக்கோல்) வழங்கும் திட்டத்தை 2014-15ஆம் ஆண்டு தொடங்கி வைத்து, இத்திட்டத்தை செம்மையாக செயல்படுத்தினார்.

இதன்வழியில், நடைபெறும் தமிழக அரசு தமிழகத்தில் ஏற்பட்டுள்ள வறட்சி காரணமாக குறிப்பாக கால்நடைகளுக்கு தீவன பற்றாக்குறையை போக்க இம்மாவட்டத்தில் வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் **5 உலர் தீவன கிடங்குகளை ரூ.90 இலட்சத்து 35 ஆயிரம்** மதிப்பீட்டில் இன்று (11.03.2017) அரியலூர், செந்துறை, பெரியவளையம், தா.பழூர் மற்றும் ஆண்டிமடம் ஆகிய கால்நடை நிலையங்களில் துவங்கி வைக்கப்பட்டுள்ளது. மேற்படி, தீவன கிடங்குகள் மூலம் உலர் தீவனம் (வைக்கோல்) கொள்முதல் செய்யப்பட்டு, ஏழை விவசாயிகளுக்கு அரசு மானிய விலையான கிலோ **ரூ.2/-**க்கு வழங்கப்படவுள்ளது. ஒரு மாட்டிற்க்கு தினசரி **3** கிலோ வைக்கோல் என்ற அடிப்படையில் வாரத்திற்கு **105** கிலோ மானிய விலையில் உலர் தீவனம் (வைக்கோல்) வழங்கப்படும். இதனால், இம்மாவட்டத்திலுள்ள **1,57,136** மாடுகளுக்கு **3** மாதங்களுக்குத் தேவையான உலர் தீவனம் **42,898** மெ.டன் ஆனால், உற்பத்தியாகும் என எதிர்நோக்கும் உலர் தீவனம் **38,823** மெ.டன் ஆகும். மேற்படி, உலர் தீவனம் பற்றாக்குறையான **4,075** மெ.டன் பற்றாக்குறையை சமாளித்திட இவ்வுலர் கிடங்கு தீவனம் மூலம் சரிசெய்யபடும்.

மேலும், பசுந்தீவன பற்றாக்குறை தீர்க்க நீர்பாசன வசதியுள்ள விவசாயிகளின் **150** ஏக்கர் நிலத்தில் **ரூ.3 இலட்சம்** நிதி ஒதுக்கீட்டில் குறுகிய கால தீவன சோளம் **50 சதவீதம்** (ஏக்கருக்கு ரூ.2000) சாகுபடி செய்ய மேற்கொள்ள திட்டமிட்டு பயனாளிகளுக்கு தீவனச்சோள விதைகள் வழங்கப்படவுள்ளன. எனவே, கால்நடை வளர்போர் தங்கள் குடும்ப அட்டை மற்றும் ஆதார் அட்டையுடன் உவர் தீவனக் கிடங்கு அமைந்துள்ள கால்நடை மருந்தக கால்நடை உதவி மருத்துமனை அணுகி பயன்பெறுமாறு மாண்புமிகு அரசு தலைமை கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் J.K.N.இராமஜெயலிங்கம், கால்நடைப்பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் நசீர், உதவி கால்நடை இயக்குநர் பாஸ்கரன், கால்நடை உதவி மருத்துவர்கள் குமார், சேகர், காளீஸ்வரன் மற்றும் கால்நடை ஆய்வாளர்கள், கால்நடை பராமாப்பு உதவியாளர்கள், பொதுமக்கள் ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.